**கவனிக்க.-** 2015.10.23 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் பொலநறுவை நீதாசன வலயத்திற்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1939 - 2015 ඔක්තෝබර් මස 30 වැනි සිකුරාදා - 2015.10.30

*1939 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1438 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனை | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1443 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 1447 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## கொட்டபொல பிரதேச சபை

கொட்டபொல பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழே குறிக்கப்பட்டுள்ள பதவிகளுக்கு தகுதி வாய்ந்தவர்களை தேர்ந்தெடுப்பதற்காக உரிய தகைமைகளையுடைய பிரதேச சபையின் வலுப்பிரதேசத்தின் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | வெற்றிடத் தொகை | மாதாந்த சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | மின்சார தொழில் நுட்பவியலாளர் | 1 | PL-2-2006A - ரூபா 12,210-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,600 | க. பொ. த. (சாதாரண) தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் உட்பட குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். பதவிச் செயற் பாட்டிற்கு தொடர்பான தொழிற்பயிற்சி நிறு வனத்தின் சான்றிதழைப் பெற்றிருத் தல் வேண்டும். |
| 2 | பார இயந்திர இயக்குநர் | 1 | PL-3-2006 - ரூபா 12,470-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,600 | க. பொ. த. (சாதாரண) தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது விஷேட சித்தி இரண்டுடன் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். திணைக்கள உறுப்பினர் உட்பட பரீட்சைக் குழுவினரால் பெகோ இயந்திர செயற்பாடு தொடர்பாக நடத்தப்படும் பரீட்சையில் சித்தி பெற்றிருத் தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப் படுத்தப்படல் வேண்டும்.) |
| 3 | அலுவலக சேவை உதவியாளர் | 1 | PL-3-2006A - ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 | க. பொ. த. (சாதாரண) தரப் பரீட்சையில் இரு அம்ர்வுகளுக்கு மேற்படாது விஷேட சித்தி இரண்டுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |

**1. தேவையான வேறு தகைமைகள் :**

(i) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும், 45 வயதுக்கு கூடாமலும் இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர் பரம்பரை மூலம் அல்லது பதிவு மூலம் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(iii) கொட்டபொல பிரதேச சபையின் வலுப்பிரதேசத்தில் வதியும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் ;

(iv) நன்னடத்தையுடையவராகவும், நல்ல சரீர சுகத்தையும் உடையவராக இருத்தல் வேண்டும்;

(v) குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டவராக தண்டிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது ;

(vi) அரச/உள்ளூராட்சி மற்றும் கூட்டுத்தாபன சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவராக இருத்தல் கூடாது ;

(vii) தற்போது கொட்டபொல பிரதேச சபையில் இப்பதவிகளுக்காக அமைய, மாதிரி, கொடுப்பனவு, கொந்திராத் முறையில் சேவை புரிபவராயின் அதிக கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**2. சேவைக்கு அமர்த்தும் நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரம் மற்றும் ஓய்வூதியம் உடையதுமாகும்;

(ii) விதவைகள்/தபுதாரர் மற்றும் அநாதைகள் நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்;

(iii) பதவி 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும்;

(iv) இந்த ஆட்சேர்ப்பு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் கட்டளைகளுக்கும் மற்றும் நிதிக் கட்டளைகளுக்கும், திணைக்களத்தின் கட்டளைகளுக்கும், அரச மற்றும் தென் மாகாண சபையினால் விதிக்கப்படும் வேறு கட்டளைகளுக்கும் மற்றும் கொள்கைகளுக்கும் அனுசரித்து செயற்பட அனைத்து ஊழியர்களும் கட்டுப்படுதல் வேண்டும்.

3. **ஆட்சேர்ப்பு முறைகள்** :

* முறையான நேர்முகப் பரீட்சை குழுவினரால் தகுதி வாய்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படும்
* விண்ணப்பப்படிவங்களுடன் கீழே குறிப்பிடப்படும் சான்றிதழ்களின் நிழற்படப்பிரதிகள் இணைக்கப்பட வேண்டியதோடு, நேர்முகப் பரீட்சையின்போது மூலப் பிரதிகள் முன்வைக்கப்படல் வேண்டும் :

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(3) கல்விச் சான்றிதழ் ;
(4) வதிவினை உறுதிப்படுத்த கிராம அலுவலரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் (பிரதேச செயலாளரின் மேலொப்பத்துடன்)
(5) சமீப காலத்தில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ் இரண்டு;
(6) தொழில் பயிற்சிச் சான்றிதழ் மற்றும் வேறு திறமைச் சான்றிதழ்;
(7) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்களை நிர்வாகத் தலைவர் அவர்களின் சிபாரிசுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

4. ஆட்சேர்ப்பு முறைக்கேற்ப பெற்றுக்கொள்ளப்படும் ஆகக்கூடிய புள்ளிகளின்படி தகுதி வாய்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

5. தேவையான தகுதிகளை கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

6. விண்ணப்பதாரிகள் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்க தயார் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் 2015.11.30 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதமாக "செயலாளர், கொட்டபொல பிரதேச சபை, கொட்டபொல" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்பட்ட கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும். தவறான விலாசம் குறித்த விண்ணப்பங்கள் தொடர்பாகவும் தாமதமாகி கிடைக்கும் அல்லது நிபந்தனைகளுக்கு உட்படாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது இடைப்பட்ட காலப்பகுதியில் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு, அறிவித்தலை இரத்துச் செய்தல், திருத்தி அமைத்தல் போன்ற அனைத்து உரிமைகளும் கொட்டபொல பிரதேச சபையின் செயலாளரின் அதிகாரத்தின்படியே.

என். மல்லிகா தஹநாயக்க,
செயலாளர்,
கொட்டபொல பிரதேச சபை,
தெனியாய.

2015, செத்தெம்பர் 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

***கொட்டபொல பிரதேச சபையில் .......................................... பதவிகளுக்கான விண்ணப்பப்படிவம்***

1. விண்ணப்பதாரியின் பெயர் : (முதலெழுத்துக்களுடன்) :-----.
2. முதலெழுத்துக்களினால் குறிப்பிடும் பெயர் :-----.
3. தொலைபேசி இலக்கம் :-----.
   நிரந்தர விலாசம் :-----.
4. பிறந்த திகதி :-
   வருடம் :-----. மாதம் :-----, திகதி :-----.
5. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :
   வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----.
6. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-----.
7. ஆண்/பெண் :-----.
8. திருமணமானவரா?/திருமணமாகாதவரா? :-----.
9. தேசிய இனம் :-----.
10. நீர் இலங்கை பிரசையா? அவ்வாறாயின் பிரசா உரிமை மூலமா? பதிவின் மூலமா?
11. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைத்தல் வேண்டும்) :-----.

12. நீர் தற்போது பிரதேச சபையில் சேவை புரிபவராயின் -
(i) தற்போதைய பதவி :-----.
(ii) பதவிக்கு உட்பட்ட திகதி :-----.
(iii) பதவியின் தரம் (நிரந்தர/அமைய /தற்காலிக/மாதிரி/ஒப்பந்த/கருத்திட்டத்தின்படி)
13. பயிற்சியும் மற்றும் தொழிற் தகைமைகளும் :-----.

இந்த விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட அனைத்து விபரங்களும் உண்மையானதும், அதில் எதுவும் பிழை இல்லை எனவும் சான்றுபடுத்துகின்றேன். மேற்குறித்த தகவல்களில் எவையாயினும் பிழையானது எனத் தெரியவந்தால், எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின் தெரியவந்தால் எனது நியமனம் எந்த விதம் நட்டஈடு செலுத்தாது இரத்துச் செய்யப்பட்டு வேலையிலிருந்து நீக்கப்பட ஏதுவாகும் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -----.

10-1187

---

**நீர்கொழும்பு மாநகர சபை**

மேல் மாகாண சபையில் வெற்றிடங்களை நிரப்புதல்

நீர்கொழும்பு மாநகர சபையில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்குக் குறித்த தகைமைகளுள்ள மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவர்களிடம் மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்து "மாநகர ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு" எனும் முகவரிக்கு 2015.11.30 ஆந் திகதிக்கு முன்னர் எனக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத் தலைவரினூடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

| பதவிப் பெயர் | தரம் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவு | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| துறைரீதியான தொழிலாளர்கள் | III | 3 | PL-1-2006A ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 | 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் வேண்டும் |
| சுகாதாரத் தொழிலாளர்கள் | III | 2 | PL-1-2006A ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 | 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் வேண்டும் |
| சாரதிகள் | II ஆ | 5 | PL-3-2006A ரூபா 12,470-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,860 | க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் 2 திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (குறைந்தபட்சம் ஒரு அமர்வில் 5 பாடங்களாவது சித்தியடைய வேண்டும்.) |

| பதவிப் பெயர் | தரம் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவு | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| ஆயுர்வேத மருந்துக் கலவையாளர்கள் | III | 1 | PL-2-2006A<br>ரூபா 12,210-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,600 | க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் 2 திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>(குறைந்தபட்சம் ஒரு அமர்வில் 5 பாடங்களாவது சித்தியடைய வேண்டும்.) |

**சாரதிப் பதவிக்கு பூர்த்திசெய்திருக்க வேண்டிய கல்வித் தகைமைகளும் ஏனைய தொழில் தகைமைகளும்**

***தொழில் தகைமைகள்.-*** தனியார்/வாடகை வாகனங்கள் மற்றும் கடின வாகனங்கள் 24 அந்தரை விடக் குறைவான வெகன் வாகன செலுத்துகை தொடர்பில் மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப்பட்ட திறமைச் சான்றிதழ் காணப்பட வேண்டும்.

***அனுபவமும் ஏனைய தகைமைகளும்.-*** வாகனச் சாரதியாக மூன்று வருட அனுபவம் காணப்பட்டல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்) பெருந்தெருச் சட்டங்கள் தொடர்பாக சிறந்த அறிவு காணப்பட வேண்டும்.

***உடற்தகைமைகள்.-*** பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குரிய உடல் மற்றும் உளத் தகுதிகளுடனிருத்தல் வேண்டும். சாரதிப் பதவிக்குரிய ஆகக்குறைந்த உயரம் 5 அடியாக இருத்தல் வேண்டும். பகல் மற்றும் இரவு வேளைகளில் பணியாற்றுவதற்குரிய உடற்தகைமைகளைக் கொண்டுள்ளதுடன் கண்பார்வையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

***ஏனையவை.-*** இலங்கைப் பிரசையாகவிருப்பதுடன் விண்ணப்பம் கோரப்படும் திகதிக்கு உடன் முன்னர் 3 வருடங்கள் தொடர்ந்து மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராகவிருத்தல் வேண்டும், அத்துடன் சிறந்த நல்லொழுக்கமுடையவராகவிருத்தல் வேண்டும். அத்துடன் பதவியில் அமர்த்தப்படுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருப்பதாக விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தல், வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதிக்கு அத்தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

***ஆயுர்வேத மருந்துக் கலவையாளர் பதவிக்குப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகள்.-*** அரச ஆயுர்வேத மருந்தகமொன்றில் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத மருந்தகமொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத காலப்பகுதிக்கான சேவை அனுபவம் காணப்படல் வேண்டும்.

**சகல பதவிகளுக்கும்:**

***உடற்தகைமைகள்.-*** பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குரிய உடல் மற்றும் உளத் தகுதிகளுடனிருத்தல் வேண்டும். சாரதிப் பதவிக்குரிய ஆகக்குறைந்த உயரம் 5 அடியாக இருத்தல் வேண்டும். பகல் மற்றும் இரவு வேளைகளில் பணியாற்றுவதற்குரிய உடற் தகைமைகளைக் கொண்டுள்ளதுடன் சிறந்த கண்பார்வையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

***ஏனையவை.-*** இலங்கை பிரசையாகவிருப்பதுடன் விண்ணப்பம் கோரப்படும் திகதிக்கு உடன் முன்னர் 3 வருடங்கள் தொடர்ந்து மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராகவிருத்தல் வேண்டும், அத்துடன் சிறந்த நல்லொழுக்கமுடையவராகவிருத்தல் வேண்டும். அத்துடன் பதவியில் அமர்த்தப்படுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருப்பதாக விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தல், வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதிக்கு அத்தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

***வயது -***
: குறைந்த வயது எல்லை - விண்ணப்ப முடிவுத் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.
: உயர்ந்த வயது எல்லை - 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.
: சாரதிப் பதவிக்கான விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி உள்ளடங்கலான மாதத்திற்கு உடன் முன்னைய மாதத்தின் இறுதி நாளைக்கு 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**பதவியின் தன்மை** : நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதும் ஆகும்.

* பதவியில் அமர்த்தப்பட்டு 5 வருடங்கள் முடிவடைய முன்னர் 01/2014 பொது நிருவாகச் சுற்றறிக்கையின்படி குறித்த மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

* விதவைகள், அநாதைகள்/விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செலுத்துதல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை:**

1. ***துறைரீதியான தொழிலாளர்கள் மற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள்.***- முறையான நேர்முகப் பரீட்சையொன்றில் விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் ஒழுங்கில் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

2. ***சாரதி.***- முதலில் தகைமைகளைப் பரீட்சிப்பதற்கான முறையான நேர்முகப் பரீட்சையொன்றிற்கு உட்படுத்தப்படுவர். அதில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளுக்கு திணைக்களப் பிரிதிநிதியொருவர், மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள மோட்டார் பரிசோதகர் ஒருவர் மற்றும் பொலிஸ் வாகனப் போக்குவரத்துப் பிரிவின் அலுவலரொருவர் உள்ளடங்கலான குழுவொன்றினால் நடாத்தப்படும் வாகனமோட்டும் திறனை மதிப்பிடுவதற்கான பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும்.

3. ***ஆயுர்வேத மருந்துக் கலவையாளர்.***- விண்ணப்பங்களைப் பரிசீலித்து தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்ததன் பின்பு அதில் பெறும் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

**மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்ட பொது நிபந்தனைகளுக்குப் புறம்பான நிபந்தனைகள் :**

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் ஒழுங்குவிதிகள், மேல் மாகாண சபை நிதி அலுவல் ஒழுங்குக் கோவை, காலத்துக்குக் காலம் மேல் மாகாண கௌரவ ஆளுநரால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது கட்டளைகளுக்கும் மேல் மாகாண அரசாங்க ஆணைக்குழுவினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் கட்டளைகளுக்கும் அமைச்சு மற்றும் திணைக்களக் கட்டளைகளுக்கும் திணைக்களத் தலைவர்களால் விதிக்கப்படும் கட்டளைகளுக்கும் ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**மேல் மாகாண சபை மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விதிமுறைக்கோவைகளில் காணப்படும் வரைவிலக்கணங்களுக்குப் புறம்பான வரைவிலக்கணங்கள் :**

மேல் மாகாண மற்றும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் விதிமுறைக் கோவைகளில் காணப்படும் வரைவிலக்கணங்களுக்குப் புறம்பான வரைவிலக்கணங்கள் ஏதுமிருப்பின் அது தொடர்பாக மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, மேல் மாகாண கௌரவ ஆளுநரிடம் விசாரித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாநகர ஆணையாளர்,
நீர்கொழும்பு மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
நீர்கொழும்பு.
2015.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீர்கொழும்பு மாநகர சபையில் .................................. பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

(அலுவலக உபயோகத்துக்காக)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
2. முழுப்பெயர் :-----.
3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-----. தொலைபேசி இலக்கம் :-----.
4. நிரந்தர முகவரி :-----.
5. தபால் முகவரி :-----.
6. நிரந்தரமாக வதியும் மாவட்டம் :-----.
7. நிரந்தரமாக வதியும் மாவட்டத்தின் பிரதேச செயலாளர் பிரிவு :-----.
8. நிரந்தரமாக வதியும் மாவட்டத்தின் உள்ளூராட்சிப் பிரிவு :-----.
9. பிறந்த திகதி :-----.
10. 2015.11.30 ஆந் திகதியன்று வயது :-----.

11. கல்வித் தகைமைகள் :- (சான்றிதழ்களின் நிழற்படப் பிரதி இணைக்கப்படல் வேண்டும்) :-----.

12. அனுபவம் :-----.(சான்றிதழ்களின் சாரதி மற்றும் ஆயுர்வேத மருந்துக் கலவையாளர் பதவிகளுக்கு நிழற்படப் பிரதி இணைக்கப்பட வேண்டும்)

13. தொழிற் தகைமைகள் :- (சான்றிதழ்களின் நிழற்படப் பிரதி இணைக்கப்பட வேண்டும்) :-----.

14. ஏனைய தகைமைகள் :-----.

15. நீங்கள் எப்போதாயினும் நீதிமன்றமொன்றில் தவறொன்றுக்குக் குற்றவாளியாகியுள்ளீர்களா என்பது? :-----.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள், எனது நம்பிக்கைக்கும் அறிவுக்கும் எட்டிய வகையில் உண்மையானதென தெரிவித்துக்கொள்கின்றேன். ஏதேனும் தகவல் பிழையானது என ஆட்சேர்ப்புக்கு முன்னர் தெரியவரின் நான் தகைமையற்றவனாவதற்கும், ஆட்சேர்த்த பின்னர் தெரியவரின் சேவையில் இருந்து அகற்றப்படுவதற்கும் உடன்படுகின்றேன் என்றும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தொடர்பாக திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ........................ தற்போது இந்த திணைக்களத்தில்/நிறுவனத்தில் ........................ ஆகப் பணியாற்றுகின்றார். அவர் எவ்விதத்திலாயினும் ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கு (அறிவுறுத்துவதலலாது) உட்படவில்லை என்பதை இத்தால் உறுதிப்படுத்தி விண்ணப்பத்தை பரிந்துரைக்கின்றேன்/பரிந்துரைக்கவில்லை.

-----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திகதி :-----.

10-1198

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**பருத்தித்துறை பிரதேச சபை - புலோலி**

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமம் அளித்தற் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான*
*1987 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டம்*

இதன் கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர் கீழே அட்டவணையில் குறிப்பிட்ட, இடத்தில் அவரின் பெயருக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள களரியை 2016 ஆம் ஆண்டில் வைத்திருப்பதற்கு மேற்படி உரிமமளித்தல் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

அத்தகைய உரிமம் அக்களரிக்கு வழங்கப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும், சொல்லப்பட்ட களரிக்கென உத்தேசிக்கப்பட்டிருக்கும் வளவுக்கு அண்மையில் வதியும் எந்த ஆளும் தனது ஆட்சேபனைக்கான ஏதுக்கள் பற்றிய எழுத்து மூலமான கூற்றொன்றினை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்படும் திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் இரு பிரதிகளில் எனக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

திருமதி ச. தர்மராஜா,
செயலாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை.

பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி,
2015, ஒற்றோபர் 06.

**அட்டவணை**

| விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் | களரியின் தலைவரா, செயலாளரா அல்லது முகாமையாளரா என்பது | களரியின் பெயர் | களரி அதனது செயற்பாடுகளை நடாத்த உத்தே சித்திருக்கின்ற மனைக்கலம் |
|---|---|---|---|
| கிட்டிணன் சிவப்பிரகாசம், கூவில், புலோலி தெற்கு, புலோலி | செயலாளர் | றோயல் பொழுதுபோக்குக் கழகம் | புனிதநகர் வீதி, ஆனைவிழுந்தான், புலோலி |

10-951

---

**பருத்தித் துறை பிரதேச சபை - புலோலி**

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமமளித்தல் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டம்*

இதன் கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர் கீழே அட்டவணையில் குறிப்பிட்ட இடத்தில் அவரின் பெயருக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள களரியை 2016 ஆம் ஆண்டில் வைத்திருப்பதற்கு மேற்படி உரிமமளித்தல் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

அத்தகைய உரிமம் அக்களரிக்கு வழங்கப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும் சொல்லப்பட்ட களரிக்கென உத்தேசிக்கப்பட்டிருக்கும் வளவுக்கு அண்மையில் வதியும் எந்த ஆளும் தனது ஆட்சேபனைக்கான ஏதுக்கள் பற்றிய எழுத்து மூலமான கூற்றொன்றினை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்படும் திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் இரு பிரதிகளில் எனக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

திருமதி ச. தர்மராஜா,
செயலாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை.

பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி,
2015, ஒற்றோபர் 06.

**அட்டவணை**

| விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும் | களரியின் தலைவரா செயலாளரா அல்லது முகாமையாளரா என்பது | களரியின் பெயர் | களரி அதனது செயற்பாடுகளை நடாத்த உத்தேசித்திருக்கின்ற மனைக்கலம் |
|---|---|---|---|
| பொன்னையா செல்வகிருஸ்ணன் கூவில், புலோலி தெற்கு, புலோலி. | செயலாளர் | புலோலி பொழுதுபோக்குக் கழகம் | மந்திகை, புலோலி தெற்கு, புலோலி. |

10-952

## வத்தளை - மாபோல நகர சபை

ஊன்வினைஞர் கட்டளைச்சட்டம் (272 ஆம் அத்தியாயம்)

இங்கு கீழே குறிப்பிடப்படும் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்ட தனிநபர்களினால் அவர்களின் பெயர்களுக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் 2016.01.01 ஆந் திகதியிலிருந்து 2016.12.31 ஆந் திகதி வரை மாடுகள் அறுப்பிடங்களை நடத்திச் செல்வதற்காக அனுமதி பத்திரமொன்றிற்காக விண்ணப்பிக்கப்பட்டிருப்பதனால், இங்கு அனுமதி பத்திரத்தை வழங்குவது சம்பந்தமாக, வத்தளை-மாபோல நகர சபை அதிகார பிரதேசத்தில் வசிக்கும் யாராவதொருவர் எதிர்ப்பு தெரிவிப்பதனால், தங்களது எதிர்ப்புக்களை காரணங்களை காட்டி விபரங்களோடு இரண்டு பிரதிகளுடனான கடிதமொன்றின் மூலம் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் எனக்கு பதிவுத்தபால் மூலம் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டுமென ஊன்வினைஞர் கட்டளைச்சட்டத்தின் (272 ஆம் அத்தியாயம்) 7 (2) ஆம் பிரிவின்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டீ. பீ. எச். சமரவிக்கிரம,
செயலாளர்,
மற்றும் வத்தளை மாபோல
நகர சபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள்
பணிகள் நடைமுறைப்படுத்தும் அலுவலர்,
வத்தளை-மாபோல நகர சபை.

நகர சபை அலுவலகம்,
வத்தளை-மாபோல,
2015, ஒற்றோபர் 09.

### அட்டவணை

| தொடர் இல. | விண்ணப்பதாரியின் பெயரும் விலாசமும் | வியாபாரம் | தொழிலை நடாத்தும் இடம் |
|---|---|---|---|
| 01 | சேகுதாவித் நஜிமுதீன்<br>இல. 752/3, நீர்கொழும்பு வீதி,<br>மாபோல, வத்தளை | மாடு அறுப்பிடம்<br>நடத்திச் செல்வது | இல. 41/12, தெல்கஹவத்தை,<br>தூவவத்தை, மாபோல, வத்தளை |

10-959

---

## தங்காலை பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சட்டத்தின் 24 (1) அ உப பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 (1) அ ஆவது உப பிரிவின் பிரகாரம் தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்ட தங்காலை பிரதேச சபையினால் பின்வரும் அட்டவணையில் நிரல்படுத்தப்பட்டுள்ள வீதி தங்காலை பிரதேச சபைக்குரிய வீதியாக பிரகடனப்படுத்தப்படுவதாக இத்துடன் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

இது விடயமாக பிரதேச பொதுமக்களிடமிருந்து வீதிகளுக்குரிய காணிகளின் உரிமைக்கார்களான உரித்துடையோர்கள் யாதேனும் எதிர்ப்புக்கள் தெரிவிப்பதாயின் இவ்வறிவித்தல் வர்த்தமானியில் வெளியாகிய தினத்திலிருந்து ஒரு மாதத்திற்குள் தமது உரிமையை உறுதி செய்வதானது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 (2) ஆவது பிரிவின் பிரகாரம் செயற்படுமாறு இத்துடன் அறிவித்தல் தரப்படுகின்றது.

இக்கால கட்டத்தில் இவ்வறிவித்தல் விடயமாக இது சம்பந்தமான எதிர்ப்புக்கள் கிடைக்காதுவிடின் அட்டவணையில் உள்ள வீதியானது தங்காலை பிரதேச சபைக்குரிய வீதி என்று ஏற்கப்பட்டு பரிபாலிக்கப்படுமென்று பொதுமக்கள் கவனத்துக்கு இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

பிரியந்த லால் ரத்நாயக்க,
பதில் செயலாளர்,
தங்காலை பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,*
*தங்காலை,*
*நெட்டொல்பிட்டிய*
*2015, யூலை 20.*

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| வீதியின் பெயர் | - | "நிலவீர மாவத்தை" |
| கிராம அலுவலர் பிரிவு | - | உணாகூறுவ கிழக்கு |
| வீதியின் ஆரம்பம் | - | தங்காலை மாத்தறை பிரதான பாதை |
| வீதியின் முடிவு | - | கடற்கரை |
| வீதியின் அகலம் (அடி) | - | 11 முதல் 14 வரை |
| வீதியின் நீளம் (மீற்றர்) | - | 200 |

10-1031

---

**தெஹிவளை - கல்கிசை மாநகர சபை**

வரவு செலவுத்திட்டம் - 2016

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 212ஆம் பிரிவின் பிரகாரம் தெஹிவளை - கல்கிசை மாநகர சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட விபரம் 2015.10.30 தொடக்கம் 2015.11.05 வரை அலுவலக நேரத்தில் பொது மக்களின் பரிசீலனைக்கு வைக்கப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

இவ்விடயம் தொடர்பாக 09.10.2015 ஆந் திகதிய 1936 ஆம் இலக்க வர்த்தமானியின் IV (ஆ) பிரிவில் வெளியிடப்பட்ட (10-376) வர்த்தமானி அறிவித்தல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

தனசிறி அமரதுங்க,
மாநகர பிதா,
தெஹிவளை- கல்கிசை மாநகர சபை.

*மாநகர சபை அலுவலகம்,*
*தெஹிவளை- கல்கிசை,*
*2015, ஒற்றோபர் 30.*

10-1154

---

**மாத்தறை மாநகர சபை**

வரவு செலவுத் திட்டப் பேரேடு - 2016

2016 ஆம் ஆண்டுக்கான திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களின் வரவுசெலவுத்திட்ட பேரேடு 2015.10.30 ஆந் திகதியிலிருந்து ஏழு (07) நாட்களுக்கு பொது மக்கள் பரிசீலனைக்காக மாத்தறை மாநகர சபை அலுவலகத்தினுள் வெளிப்படையாக வைக்கப்பட்டிருக்கும் என்பதை மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 212 (ஆ) பிரிவின் கீழ் இத்தால் அறியத்தருகின்றேன்.

டி. ஜீ. ரன்ஜித் யஸரத்ன,
தலைவர் (பதில்),
மாத்தறை மாநகர சபை.

*மாநகர சபை அலுவலகம்,*
*மாத்தறை,*
*2015, ஒற்றோபர் 30.*

10-1200

# நானாவித அறிவித்தல்கள்

**கம்பளை நகர சபை**

*அனுமதிப்பத்திர கட்டணம்/வரி விதிப்பு - 2016*

*நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 162, 163,164,165 (அ), (ஆ) ஆம் பிரிவுகளின் பிரகாரம் கம்பளை நகர சபையின் நிர்வாக எல்லைகளுக்கு, கிளை எல்லைகளுக்கு நிபந்தனைகளின் கீழ் வரி மற்றும் அனுமதிக்கட்டணம் விதித்து அறவிடுவதற்காக வழங்கப்பட்டுள்ள உரிமைக்கமைய கம்பளை நகர சபை எல்லைக்குள் நடாத்திச் செல்லும் கீழ்காணும் அட்டவணைகளில் ஒவ்வொரு தொழில் தொடர்பான இடத்தின் வருடாந்த பெறுமதியின் பிரகாரம் வருடாந்த வரி அல்லது கடந்த ஆண்டுகளின் வியாபார பெறுவனவுகளுக்கமைய வருடாந்த வரி 2016 ஆம் வருடத்திற்காக விதித்து அறவிடுவதற்கு கம்பளை நகர சபை விஷேட ஆணையாளரின் 2015.09.29 ஆந் திகதி பிரேரணை இல. 2015-170 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றேன்.*

*2016 ஆம் ஆண்டு அனுமதிக் கட்டணம் அல்லது வரி 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும் என்பதையும் மேலும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*பீ. எம். பீ. எஸ். பீ. பஸ்நாயக்க,*
*விஷேட ஆணையாளர்,*
*கம்பளை நகர சபை.*

*நகர சபை அலுவலகம்,*
*கம்பளை,*
*2015, ஒற்றோபர் 08.*

**நகர சபை கட்டளைச்சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 164 மற்றும் 165 ஆ பிரிவுகளின் பிரகாரம் விதிக்கப்படும் அனுமதிப்பத்திரக் கட்டணம்**

**அட்டவணை இல. 1**

| I ஆம் நிரல் | | II ஆம் நிரல் | | |
|---|---|---|---|---|
| தொடர் இல. | தொழிலின் வகை | வருடாந்த பெறுமதி 750 ரூபா வரை ரூபா ச. | வருடாந்த பெறுமதி 751 ரூபா முதல் 1,500 ரூ. வரை ரூபா ச. | வருடாந்த பெறுமதி 1,500 ரூபாவுக்கு மேல் ரூபா ச. |
| 1. | பேக்கரி ஒன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 2. | சாப்பாட்டுக் கடை, தேநீர், கோப்பிக்கடை ஒன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 3. | சிற்றுண்டிச் சாலை (Restaurant) ஒன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 4. | விடுதி ஒன்றை நடாத்திச் செல்லுதல் (தங்குமிடம்) | 500 0 | 750 0 | 1,000 0 |
| 5. | போசணைச்சாலை ஒன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 6. | பாற்பண்ணையொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 7. | பால் விற்பனை நிலையத்தை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 8. | முடி வெட்டும் நிலையத்தை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 9. | மீன் விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 10. | இறைச்சி விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 11. | பழங்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 12. | மரக்கறி விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 13. | ஆடை சலவை செய்யும் விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் (Laundary) | 500 0 | 750 0 | 1,000 0 |
| 14. | இலங்கை உல்லாச சபையில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல், போசணைச்சாலை அல்லது வாடி வீடொன்றை நடாத்திச் செல்லுதல் (ஆரம்ப வருடத்திற்கு) | 500 0 | 750 0 | 1,000 0 |
| 15. | இலங்கை உல்லாச சபையில் பதிவு செய்யப்பட்ட 2015 ஆம் ஆண்டு நடாத்திச் சென்ற ஹோட்டல், போசணைசாலை அல்லது வாடி வீடொன்றை 2016 ஆம் ஆண்டும் நடாத்திச் செல்லுதல் | 2016 ஆம் ஆண்டு ஹோட்டல், போசணைசாலை அல்லது வாடிவீட்டில் பெற்ற வருமானத்தில் 0.5% இற்கு சமனான பணம் | | |

| தொடர் இல. | I ஆம் நிரல் தொழிலின் வகை | II ஆம் நிரல் வருடாந்த பெறுமதி 750 ரூபா வரை ரூபா ச. | வருடாந்த பெறுமதி 751 ரூபா முதல் 1,500 ரூ. வரை ரூபா ச. | வருடாந்த பெறுமதி 1,500 ரூபாவுக்கு மேல் ரூபா ச. |
|---|---|---|---|---|
| | **அபாயகரமான வியாபாரங்கள்** | | | |
| 1. | கபொக், மணல், கல் அல்லது கருங்கல் களஞ்சியப்படுத்தி வைத்தல் அல்லது விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 2. | 50 கலன்களுக்கு மேலதிகமாக தேங்காய் எண்ணெய் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 3. | தேங்காய் எண்ணெய் அல்லாத வேறு மரக்கறி எண்ணெய் வகைகள் 12 கலன்களுக்கு மேலதிகமாக தேங்காய் எண்ணெய் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 4. | தீப்பெட்டி தயாரிப்பு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 5. | செங்கல் அல்லது ஓடு களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 6. | தும்பு அல்லது வேறு நார் வகைகள் உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 7. | பாவித்த ஆடைகள் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 8. | தானியங்கள் அல்லது பருப்பு வகை தானியங்கள் 05 அந்தருக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 9. | இயந்திரங்கள் உபயோகித்து மர ஆலை ஒன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 10. | தங்க நகைகள் உற்பத்தி செய்தல் அல்லது பழுதுபார்த்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 11. | மரப் பலகை களஞ்சியசாலையொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 12. | விறகு களஞ்சியசாலையொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 13. | இயந்திரங்கள் உபயோகிக்காத தொழிற்சாலையொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 14. | தொகை விற்பனைக்காக மா, வெங்காயம் அல்லது சீனி 15 அந்தருக்கு மேலதிகமாக களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 15. | வெற்று போத்தல்கள், வெற்று சாக்குகள் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 16. | துவிச்சக்கர வண்டி அல்லது மோட்டார் சைக்கிள் பழுது பார்த்தலுக்கான வேலைத்தளம் ஒன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 17. | புதிய அல்லது உபயோகித்த இறப்பர் டயர் அல்லது டியூப் 50 இற்கு மேலதிகமாக களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 18. | உபயோகித்த கடதாசி அல்லது பத்திரிகைகள் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 19. | விசித்திர வர்ணம் பூசுதல் (Spray Painting) நிலையமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 20. | பதிப்பகம் ஒன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| | **அருவருப்பான வியாபாரங்கள்** | | | |
| 1. | உரம் அல்லது இரசாயன உரம் உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 2. | கோழிகள் 100 இற்கு மேல் வைத்து கோழி பண்ணையொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 3. | மிருக வைத்தியசாலையொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 4. | பாக்கு தயாரிப்புஅல்லது களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 5. | கருவாடு, உப்பு, மீன் அல்லது ஜாடி 03 அந்தருக்கு மேல் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 6. | சீமெந்து 25 அந்தருக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 7. | புகையிலை உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 8. | மிருக உணவு களஞ்சியமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |

| | I ஆம் நிரல் | II ஆம் நிரல் | | |
|---|---|---|---|---|
| தொடர் இல. | தொழிலின் வகை | வருடாந்த பெறுமதி 750 ரூபா வரை ரூபா ச. | வருடாந்த பெறுமதி 751 ரூபா முதல் 1,500 ரூ. வரை ரூபா ச. | வருடாந்த பெறுமதி 1,500 ரூபாவுக்கு மேல் ரூபா ச. |
| 9. | பிண்ணாக்கு 1 தொன்னுக்கு மேலதிகமாக களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 10. | மிருக உணவு அல்லது கோழி உணவு உற்பத்தி செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 11. | புதிய உலோகம் அல்லது கண உலோகங்களை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 12. | உலோக துண்டுகளை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 13. | வீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 14. | தச்சுத் தொழிற்சாலையொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 15. | சிரப் அல்லது பழப் பானங்கள் தயாரித்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 16. | இனிப்புப் பண்டங்கள் உற்பத்தி செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 17. | சுண்ணாம்புக் கல் அல்லது சுண்ணாம்பு களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 18. | வர்ணம், வார்னிஷ் அல்லது டிஸ்டம்பர் சாயம் 1 அந்தருக்கு மேல் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 19. | கொக்கோ அல்லது உலர்த்திய பப்பாசிப் பால் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 20. | தோற் பொருள் உற்பத்தி அல்லது தொழிற்சாலையொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 21. | கோப்பி, தானிய வகை, பருப்பு வகை, அல்லது மா அரைத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 22. | டயர் வெட்டுதல் அல்லது நிரப்புதல் நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 23. | மெழுகு வர்த்தி தயாரித்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 24. | டயர் அல்லது டியூப் வொல்கனைஸ் செய்வதற்கான நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 25. | சீமெந்துப் பொருட்கள் உற்பத்தி | 500 0 | 750 0 | 1,000 0 |
| 26. | கல் தயாரித்தல், அரைத்தல் அல்லது மெருகூட்டுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 27. | விளையாட்டுப் பொருட்கள் உற்பத்தி | 500 0 | 750 0 | 1,000 0 |
| 28. | குளிரூட்டப்பட்ட இறைச்சி அல்லது மீன் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 29. | புகைப்பட சாலையொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| | **அபாயகரமான/தொந்தரவான வியாபாரங்கள்** | | | |
| 1. | மின்சார உலோகம் பூசும் இடமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 2. | தீ விளையாட்டுப் பொருட்கள் அல்லது பட்டாசு விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 3. | பட்டரி சாஜ் பண்ணுதல் அல்லது பழுது பார்த்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 4. | வேல்டிங் வேலைத்தளமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 5. | மோட்டார் வாகனங்கள் சேவிஸ் பண்ணுதல் அல்லது பழுது பார்த்தலுக்கான வேலைத்தளமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 6. | பெற்றோல், டீசல், எண்ணெய் அல்லது வேறு எரிபொருள் வகைகள் களஞ்சியப்படுத்தி வைக்கும் இடமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 7. | விவசாய இரசாயனப் பொருட்கள் உற்பத்தி அல்லது களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 8. | அலுமீனியப் பொருட்கள் உற்பத்தி | 500 0 | 750 0 | 1,000 0 |
| 9. | A/C இயந்திரம் , குளிரூட்டி அல்லது அதிகுளிரூட்டி தயாரித்தல் அல்லது பழுது பார்த்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 10. | மின்சார தொழிற்சாலை அல்லது வானொலி பழுது பார்க்கும் வேலைத்தளம் அல்லது வானொலி உற்பத்தி நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |

*அட்டவணை இல. 02*

***(255 ஆம் அத்தியாயம்) 165 அ சட்டத்திற்கமைவாக சில தொழில் தொடர்பான வரி***

| | *I ஆம் நிரல்* | *II ஆம் நிரல்* | | |
|---|---|---|---|---|
| *தொடர் இல.* | *தொழிலின் வகை* | *வருடாந்த பெறுமதி 750 ரூபா வரை ரூபா ச.* | *வருடாந்த பெறுமதி 751 ரூபா முதல் 1,500 ரூ. வரை ரூபா ச.* | *வருடாந்த பெறுமதி 1,500 ரூபாவுக்கு மேல் ரூபா ச.* |
| 1. | மேல்நாட்டு வைத்திய நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 2. | ஆயுர்வேத வைத்திய நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 3. | முச்சக்கர வண்டி சேர்விஸ் செய்யும் /பழுது பார்க்கும் இடமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 4. | டிங்கரிங் வேலைத்தளமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 5. | பீரலு அல்லது மரத்தளபாடங்களில் செதுக்கல் வேலைத்தளமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 6. | இரும்பு கிரீல் செய்யும் /விற்பனை செய்யும் இடமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 7. | பித்தளை பொருட்கள் உற்பத்தி /விற்பனை செய்யும் இடமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 8. | ஆடைத் தொழிற்சாலையொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 9. | சிகை அலங்காரம் செய்யும் இடமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 10. | மேணி அலங்கார நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 11. | திருமண ஆடைகள்/ஆபரணங்கள் வாடகைக்கு விடும் நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 12. | கணினி அல்லது தட்டச்சு பயிற்சி நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 13. | தொலைபேசி வசதிகள் பெற்றுக் கொடுக்கும் நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 14. | கணினி/கணினி உபகரணங்கள் விற்பனை செய்யும் நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 15. | கணினி பழுது பார்க்கும் நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 16. | கையடக்கத் தொலைபேசி /தொலைபேசி உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 17. | கையடக்கத் தொலைபேசி பழுது பார்க்கும் நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 18. | பிரதி/தொலைநகல் வசதிகள் பெற்றுக்கொடுக்கும் இடமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 19. | ஒலிபெருக்கிகள் வாடகைக்கு விடுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 20. | ஒலி நாடாக்கள் பதிவு செய்யும் இடமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 21. | ஒலி நாடா/C. D/வீடியோ நாடா விற்பனை /வாடகைக்கு விடுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 22. | மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 23. | மோட்டார் சைக்கிள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 24. | இயந்திர உபகரணங்கள் உதிரிப் பாகங்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 25. | மின்சார உபகரணங்கள் /தையல் இயந்திரங்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 26. | ஆடை தைக்கும் இடமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 27. | பிரம்புப் பொருட்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 28. | விசேட வைத்திய நிபுணர் சேவை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 29. | முட்டை, பால், பாணி விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 30. | வளர்க்கும் மீன்கள் உண்டாக்குதல் /விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 31. | தேயிலைத் தூள் விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 32. | பல் கட்டும் நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 33. | பல் வைத்திய நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 34. | சுகாதாரப் பொருட்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |

| I ஆம் நிரல் | | II ஆம் நிரல் | | |
|---|---|---|---|---|
| தொடர் இல. | தொழிலின் வகை | வருடாந்த பெறுமதி 750 ரூபா வரை ரூபா ச. | வருடாந்த பெறுமதி 751 ரூபா முதல் 1,500 ரூ. வரை ரூபா ச. | வருடாந்த பெறுமதி 1,500 ரூபாவுக்கு மேல் ரூபா ச. |
| 35. | கேஸ் சிலின்டர் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் /விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 36. | டைல்ஸ் வகைகள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 37. | ரேடியேட்டர் உற்பத்தி/பழுது பார்த்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 38. | இயற்கைப் பூ விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 39. | செயற்கைப் பூ விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 40. | அழகிய ஆபரணங்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 41. | ஒளி, ஒலி உபகரணங்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 42. | அங்கவீனங்களுக்கான வைத்திய உபகரணங்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 43. | இயந்திரம் மூலம் வாகனங்களின் உள்ளே சுத்தம் செய்யும் நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 44. | குஷன் வேலை செய்யும் நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 45. | மர தளபாடங்கள் விற்பனை செய்யும் நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 46. | உணவுப் பொருட்கள் பொதி செய்து விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 47. | மணல் விற்பனைக்காக களஞ்சியப்படுத்தி வைத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 48. | தென்னை கம்பு மடுவம் ஒன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 49. | குரும்பை, இளநீர் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 50. | சாப்புப் பொருட்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 51. | உப்பு பொதி செய்து விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 52. | ஆயுர் வேத (மருந்துப் பொருட்கள் ) விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 53. | மேல்நாட்டு மருந்து விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 54. | படங்கள் பிரேம் செய்யும் நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 55. | வெற்றிலை, பாக்கு சுருட்டு விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 56. | பழைய ஆபரணங்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 57. | மட்பாண்டங்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 58. | தும்புத் தடி, கூட்டுமார், கயிறு சார்ந்த உற்பத்திப் பொருட்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 59. | புத்தக நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 60. | பாடசாலை உபகரணங்கள் /பத்திரிகைகள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 61. | பத்திக் அச்சிடும் இடமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 62. | தங்க நகைகள் விற்பனை செய்யும் இடமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 63. | அவமங்கலப் பொருட்கள், பண்டிகைப் பொருட்கள் வாடகைக்கு விடும் இடமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 64. | தண்ணீர் குழாய் இயந்திரம், அரைக்கும் இயந்திரம் விற்பனை செய்யும் இடமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 65. | பீடி/சுருட்டு உற்பத்தி நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 66. | பத்தி, விளக்கு திரி உற்பத்தி | 500 0 | 750 0 | 1,000 0 |
| 67. | அட்டபிரிகர/பூஜை பொருட்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 68. | தேசிய தொழில் வழங்கும் நிலையமொன்றை நடாத்துதல் - பாதுகாப்பாளர் சேவை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 69. | ரெக்சின் விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 70. | தேங்காய் வியாபாரம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 71. | தேயிலை தொழிற்சாலையொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 72. | முன்பள்ளி ஒன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 73. | சவச்சாலை/சவப் பெட்டி செய்யும் /இடமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 74. | சோதிட கருமங்கள் செய்யும் இடமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 75. | உபயோகிக்கப்பட்ட தொலைக்காட்சி, வானொலி, மின்சார உபகரணங்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 76. | சில்லறைப் பொருட்கள் உற்பத்தி செய்தல்/பக்கட் செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 77. | மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 78. | பெயர் பலகை, இறப்பர் முத்திரை செய்யுமிடம் நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 79. | குடை உற்பத்தி நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |

| I ஆம் நிரல் | | II ஆம் நிரல் | | |
|---|---|---|---|---|
| தொடர் இல. | தொழிலின் வகை | வருடாந்த பெறுமதி 750 ரூபா வரை ரூபா ச. | வருடாந்த பெறுமதி 751 ரூபா முதல் 1,500 ரூ. வரை ரூபா ச. | வருடாந்த பெறுமதி 1,500 ரூபாவுக்கு மேல் ரூபா ச. |
| 80. | செடிகள் வளர்க்கும் இடமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 81. | வைத்திய உபகரணங்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 82. | அனுமதிப்பத்திரமுள்ள வெளிநாட்டுக் குடிவகை /பியர் விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 83. | அனுமதிப்பத்திரத்துடன் கள் தவறணை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 84. | அனுமதிப்பத்திரத்துடன் மதுபானம் விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 85. | அனுமதிப்பத்திரத்துடன் மதுபான உற்பத்தி (காய்ச்சுதல்- பியர் உற்பத்தி) நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 86. | கண்ணாடி /அலுமீனியப் பொருட்கள் வியாபாரம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 87. | கண்ணாடி களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 88. | பழச்சாறு/குளிர்பானம்/இனிப்புப் பண்டம் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 89. | கட்டிட திட்டமிடுதல் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 90. | பொலித்தீன் /இறப்பர் சீட்/இறப்பர் பொருட்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 91. | முகவர் தபால் நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 92. | ப்லாஸ்டர் ஒப் பெரிஸ் உற்பத்தி செய்தல்/விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 93. | Fibre நார் சம்பந்தப்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்தல் /விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 94. | கொன்கிறீட் பொருட்கள் தொழிற்சாலை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 95. | பொருத்துதல் வேலைத்தளம் (Lathe works) | 500 0 | 750 0 | 1,000 0 |
| 96. | அரச அனுமதிபெற்ற லொத்தர் டிக்கட் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 97. | மோட்டார் சைக்கிள் வாடகைக்கு விடும் நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 98. | கட்டிட உபகரணங்களை வாடகைக்கு விடுதல் | | | |
| 99. | வாடி வீடு ஒன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 100. | இறைச்சிக்காக மிருகங்கள் அறுக்கும் இடமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 101. | கடிகாரம் பழுது பார்க்கும் இடமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 102. | பலசரக்கு சில்லறை வியாபாரமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 103. | சிறு ஏற்றுமதிப் பொருட்கள் கொள்வனவு செய்யும் இடமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 104. | மரக்கறி விதை, மரக்கறி உரம் விற்பனை செய்யும் இடமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 105. | இயந்திர உபகரணங்கள் வாடகைக்கு விடும் நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 106. | வாசனைப் பொருட்கள் விற்பனை செய்யும் இடமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 107. | ஐஸ் கிரீம், யோகட், குளிரூட்டிப் பொருட்கள் தயாரிப்பும் விற்பனையும் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 108. | அலுமீனியப் பொருத்திகள் மற்றும் வெனிஸ்டா விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 109. | தோற்பொருள் விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 110. | புடவை விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 111. | தைத்த ஆடைகள் விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 112. | வூல் சார்ந்த பொருட்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
